Copyright Reserved

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

No of pages: 12

# Executive Level

## Commercial Insight for Management

## (Pilot Paper)

**<u>விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>**

(1) ஒதுக்கப்பட்ட நேரம்: வாசித்தலும் திட்டமிடலும் – 20 நிமிடங்கள்
எழுதுதல் – 3 மணித்தியாலங்கள்

(2) பகுதி 1(a): 10 பல் தேர்வு வினாக்கள் (MCQs) – **அனைத்து வினாக்களும்**

பகுதி 1(b): 10 உப வினாக்கள் – **அனைத்து வினாக்களும் கட்டாயமானவை**

பகுதி 2: 4 வினாக்கள் – **ஏதாவது 3 வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக**

பகுதி 3: 1 வினா - **கட்டாயமானது**

(3) பகுதி 1(a) க்கான விடை உமக்குத் தரப்படும் விசேட விடைத்தாளில் செய்யப்படல் வேண்டும். மிகவும் பொருத்தமான விடை (A, B, C அல்லது D) விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்திற்கு எதிரே இடப்படல் வேண்டும்.

மற்றைய பகுதிகளுக்கான அனைத்து விடைகளும் உமக்கு வழங்கப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) பகுதி 1 மற்றும் பகுதி 2 க்கான விடைகளை விடைப்புத்தகத்தில் வேறான புதிய பக்கத்தில் ஆரம்பிக்கவும்.

(5) அனைத்து விடைகளும் ஒரு அத்துடன் விண்ணப்பித்த மொழியில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

# K
# E
# 5

March 2015

# பகுதி 1

| |
|---|
| *முழு வினாக்களும் கட்டாயமானவையாகும்.*<br>*பகுதி 1 க்கான மொத்தப்புள்ளிகள் 50.*<br>*இப்பகுதிக்காக ஒதுக்கப்பட்ட நேரம் 90 நிமிடங்கள்* |

**வினா 01**

**1(a): மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்ய வேண்டப்படுகின்றீர். (மொத்தம் 20 புள்ளிகள்)**

1.1. பொருளியல் ஆனது அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்தலுடன் தொடர்புபட்டதாகும். பின்வருவனவற்றில் எது பொருளியல் அருமைத்தன்மைக்கு உதாரணம் அல்லாதது?

A. சிறி பரக்குமம் எனும் சினிமாவுக்கு சுனிமால் சனிக்கிழமையன்று சென்றிருப்பின் அவனால் ஐஸ்கிறீம் வாங்க முடியாமலிருக்கும்.

B. இன்றைய பிற்பகலில் ஜயனி தனது பொருளியல் வினாவிடைப்போட்டிக்குப் படித்ததனால், அவளது நாயினை நடத்திச் செல்ல அவளுக்கு நேரமில்லாது இருக்கும்.

C. இவ்வருடம் ஆசியா மோட்டர்ஸ் அதனது ஆடம்பர வாகனங்களுக்கான உற்பத்தியினை அதிகரித்தால், விளம்பரத்திற்கு அது அதிகமி செலவிட வேண்டி நேரிடும்.

D. ABC புத்தகமானது அது கொண்டிருக்கும் தலைப்புக்களின் எண்ணிக்கையினை அதிகரித்தால், புதிய தலைப்புக்களை உள்ளடக்குவதற்காக அலுமாரியில் இடங்களை மீளஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**(2 புள்ளிகள்)**

1.2. பின்வருவனவற்றில் எது பொருளியலின் உற்பத்திச் சாத்திய வளையியினை வெளிநோக்கிச் செலுத்தக்கூடியது?

(i). வேலையின்மை மட்டத்தில் ஏற்படக்கூடிய குறைப்பு
(ii). முதலீட்டில் ஏற்படக்கூடிய அதிகரிப்பு
(iii). உற்பத்திக் காரணி ஒன்றின் விலையில் ஏற்படக்கூடிய வீழ்ச்சி
(iv). வேலையாள் ஒருவருக்கான வெளியீட்டின் அதிகரிப்பு

A. (i) & (ii) மாத்திரம்
B. (i), (ii) & (iii) மாத்திரம்
C. (i), (iii) & (iv) மாத்திரம்
D. (ii) & (iv) மாத்திரம்

**(2 புள்ளிகள்)**

1.3. பின்வருவனவற்றில் எந்த வாக்கியம் உண்மையற்றது?

A. அடிப்படைப் பொருளியல் பிரச்சனையானது திட்டமிடப்பட்ட மற்றும் சுதந்திரமான சந்தையிலும் ஒரேமாதிரியானதாகவே காணப்படுகின்றது.

B. தெரிவாகும்.

C. உற்பத்திக் காரணிகள் நிரம்பலில் மட்டுப்படுத்தப்பட்டவை.
D. நுகர்வோர் விருப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுக் காணப்படுவதனால் தெரிவு என்பது அத்தியாவசியமானது.

**(2 புள்ளிகள்)**

1.4. பின்வருவனவற்றில் எது கேள்வியின் விலை நெகிழ்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது?

A. $\dfrac{\left(\dfrac{\Delta Q}{P}\right)}{\left(\dfrac{\Delta P}{Q}\right)}$

B. $\left(\dfrac{\Delta Q}{P}\right)+\left(\dfrac{\Delta P}{Q}\right)$

C. $\left(\dfrac{\Delta Q}{\Delta P}\right)\times\left(\dfrac{P}{Q}\right)$

D. $\left(\dfrac{\Delta Q}{P}\right)-\left(\dfrac{\Delta P}{Q}\right)$

**(2 புள்ளிகள்)**

1.5. சராசரிப் பொருட்களுக்கும் (AP) எல்லைப் பொருட்களுக்கும் (MP) இடையிலான தொடர்பின் அடிப்படையில் நோக்கினால், பின்வருவனவற்றில் எது சரியானது?

A. MP வளையியானது AP வளையியினை MP வளையியின் உயர்புள்ளியில் வெட்டுகின்றது.
B. AP யானது உச்சளவில் காணப்படுமாயின், MP உம் உச்சப்புள்ளியில்தான் காணப்படும்.
C. AP யானது MP ,விட மேலாகக் காணப்படுமாயின், AP யானது வீழ்ச்சியடைகின்றது.
D. AP = MP, காணப்படுமாயின், மொத்த உற்பத்தி அதிகமாகக் காணப்படும்.

**(2 புள்ளிகள்)**

1.6. கென்றி மின்ஸ்பேக் என்பவர் மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்ட பன்னிரெண்டு முகாமைத்துவப் பாத்திரங்களை அடையாளங்கண்டார். அவை தனிநபர் பங்கு, நிறுவனங்களுக்கிடையிலான பங்கு, தீர்மானம் எடுக்கும் பங்கு போன்றவையாகும்.

A. இந்த வாக்கியம் உண்மை.
B. இந்த வாக்கியம் ஒரு பிழையினை உள்ளடக்கியுள்ளது.
C. இந்த வாக்கியம் இரு பிழைகளை உள்ளடக்கியுள்ளது.
D. இந்த வாக்கியம் மூன்று பிழைகளை உள்ளடக்கியுள்ளது

**(2 புள்ளிகள்)**

1.7. குழுக்களாக உதிரிப்பாகங்களும், பொருட்களும் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி செயன்முறையானது பின்வருமாறு அழைக்கப்படுகின்றது:

A. தொகுதி உற்பத்தி
B. வேலை உற்பத்தி
C. பாச்சல் உற்பத்தி
D. திணிவு உற்பத்தி

**(2 புள்ளிகள்)**

1.8. ''முகாமைத்துவம்'' எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்தும் மிகவும் பொருத்தமான வாக்கியத்தினைத் தெரிவு செய்க.

A. நிறுவன வளங்களின் வினைத்திறனுள்ள பயன்பாடு.
B. சரியான விடயத்தினை சரியான வழியில் செய்தல்
C. நிறுவன ஊழியர்களின் திருப்தி மட்டத்தினை அதிகரித்தல்
D. நிறுவனத்தின் இலாபத்தன்மையினை அதிகரித்தல்.

**(2 புள்ளிகள்)**

1.9. நிறுவனத்தின் தூரநோக்கு வாக்கியம் பின்வருவனவற்றில் எதற்குப் பயன்படுத்தப்படுகின்றது:

A. தந்துரோபாயத்திட்டமிடலின் கூறுகளைத் தீர்மானிப்பதற்கு.
B. தெளிவான இலக்குகளையும், அடைவு மட்டத்தினையும் அபிவிருத்தி செய்வதற்கு.
C. ஒழுங்குமுறையாக செயன்முறையினை மீளாய்வு செய்வதனை அனுமதிப்பதற்கு.
D. வணிகத்தின் தன்மை, போக்கு போன்றவற்றினைத் தீர்மானிப்பதற்கு.

**(2 புள்ளிகள்)**

1.10. தொழில் தொடர்பான அறிவு மற்றும் நுட்பங்களுடன் ஈடுபடுவதான வேலைகளை வினைத்திறனுடன் செய்வதற்கு முதல் மட்ட முகாமையாளர்களுக்கு அதிகமாக தேவைப்படுவதான திறன் பின்வருவனவற்றில் எது?

A. மானுடத்திறன்
B. எண்ணக்கருவாக்கல் திறன்

C. தொழினுட்பத்திறன்
D. நிர்வாகத்திறன்

**(2 புள்ளிகள்)**

**1(b):** செயல்படும் வினைச் சொற்களைக் கவனத்தில் எடுத்து அனைத்து வினாக்களுக்கும் குறுகிய விடைகளை எழுதுவதற்கு நீர் வேண்டப்படுகின்றீர். (மொத்தம் 30 **புள்ளிகள்**)

1.11. பணவீக்கம் என்பது பொது விலைமட்டத்திலுள்ள நிலைத்திருக்கின்றதான அதிகரிப்பாகும். பணவீக்கத்திற்கான பிரதான காரணங்களாக அதிகளவான கேள்வி (கேள்வித்தூண்டல் பணவீக்கம்) அல்லது நிரம்பல் பக்கக் காரணிகள் (செலவுத் தூண்டல் பணவீக்கம்) காணப்படலாம்.

"கேள்வித்தூண்டல் பணவீக்கம் என்பத அடிப்படையில் பணரீதியானது ஆகும்."

**வேண்டப்படுவது:**

மேலுள்ள வாக்கியத்திற்கான காரணங்களை **விளக்குக.**

**(3 புள்ளிகள்)**

1.12. பொருளின் விலையின் மாற்றமானது கேள்வித் தொகையில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. அது கேள்வியின் விலை நெகிழ்ச்சி (PED) என அழைக்கப்படுகிறது. பொருளின் விலையில் ஏற்படுகின்ற மாற்றமானது பொருளின் கேள்வித் தொகையில் மாற்றத்தினை ஏற்படுத்துவதனை இது அளவிடுகின்றது.

"கீழ்நோக்கிச் சாய்கின்ற நேர் கோட்டு கேள்வி வளையியுடன் காணப்படுகின்ற PED யின் பெறுமதியானது மாறிலியாகும்"

**வேண்டப்படுவது:**

மேலுள்ள வாக்கியத்துடன் நீர் உடன்படுகின்றீரா என **விளக்குக.**

**(3 புள்ளிகள்)**

1.13. பொருளியலில் அளவுத்திட்ட விளைவு விதி மற்றும் பொருளியல் பரப்பு போன்றவை எவ்வாறு வளர்ச்சியானது தமது கீழ் வரிசையினை மேம்படுத்தும் என முதலீட்டாளர்கள் தீர்மானிப்பதற்கு உதவுவதான இரு மிக முக்கியமான எண்ணக்கருக்களாகும்.

**வேண்டப்படுவது:**

பொருளியலில் அளவுத்திட்ட விளைவு விதி மற்றும் பொருளியல் பரப்பு போன்றவற்றிற்கு இடையிலான வேறுபாடுகள் இரண்டினை (02) **அடையாளப்படுத்துக.**

**(3 புள்ளிகள்)**

1.14. மாற்று விகிதம் என்பது நடைமுறை சந்தை விலையாகும். இங்கு ஒரு நாணயம் மற்றொன்றுக்காக பரிமாற்றப்படுகின்றது. நடைமுறையில் மிதக்கும் நாணயமாற்று விகிதமானது, நிலையான நாணயமாற்று விகிதத்தினை விட மிகவும் பிரபல்யமானது.

**வேண்டப்படுவது:**

மிதக்கும் நாணய மாற்று விகிதத்தின் அனுகூலங்கள் மூன்றினைப் (03)**பட்டியலிடுக.**

**(3 புள்ளிகள்)**

**வேண்டப்படுவது:**

சந்தர்ப்பச் செலவு எனும் எண்ணக்கருவினை **வரையறுக்குக.** அத்துடன் பொருளியல் தீர்மானத்திற்கு அதனது தொடர்பினையும் **கூறுக**

**(3 புள்ளிகள்)**

1.15. தனிநபராக அல்லது வணிகமாக இருந்தாலும், தீர்மானம் மேற்கொள்ளும் ஒவ்வொருவரும், வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை அல்லது அருமையானவை எனும் அடிப்படையில் மாற்றீடுகளிலிருந்து தெரிவினை மேற்கொள்ளல் வேண்டும்.

1.16. "வகிபாத்திரம் என்பது ஒரு நிலையில் அல்லது வரிசையிலுள்ள நபரிடமிருந்து முகாமையானது எதிர்பார்க்கின்ற நடத்தை என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. அவர் நிதிசார் முடிவுகளை அறிக்கையிடுவதுடன், முகாமைசார் தீர்மானமெடுத்தலுக்காக தகவல்களை வழங்குவதுடன், நிறுவனத்தின் நிதியினையும் பாதுகாக்கின்றார்.

**வேண்டப்படுவது:**

இடர் முகாமைத்துவ நிபுணர் எனும் வகையில் வணிகத்தில் கணக்காளரின் வகிபங்கினை **விளக்குக.** அத்துடன், நிறுவனத்தில் அவரால் மேற்கொள்ளப்படும் பிற வகிபாகங்களையும் **கூறுக.**

**(3 புள்ளிகள்)**

**வேண்டப்படுவது:**

முகாமைத்துவ அறிஞரான மின்ஸ்பேக்கினால் அடையாளங்காணப்பட்ட முகாமைத்துவ பங்குகள் பத்தினையும் மூன்று பிரதான வகைப்படுத்தலின் கீழ் **நிரற்படுத்துக.**

**(3 புள்ளிகள்)**

நிறுவனத்திலுள்ள முகாமையாளர்கள் மூன்று வகைகள் ஒன்றினுள் அதாவது - உயர்மட்ட, நடுத்தரமட்ட, கீழ்மட்ட எனும் வகைகளுக்குள் வகைப்படுத்தப்படலாம். கென்றி முகாமையாளர்கள் செயற்படுத்த வேண்டிய வகிபாகங்கள் பத்தினை (முகாமைத்துவ மட்டங்களுக்கு அப்பால்) அடையாளங்கண்டார். அவை மூன்று வகைகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

1.18. நிறுவனங்களின் முகாமையாளர்கள் தம்மிடமுள்ள வளங்கள் (மனிதவளம் மற்றும் மனித வளமல்லாதது) நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்காக வினைத்திறனுடனும், வினையாற்றலுடனும் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும்.

**வேண்டப்படுவது:**

நிறுவனப் படிமுறையில் வேறுபட்ட முகாமையாளர்களுக்கு தேவையான முகாமைத்துவத்திறன்களின் முக்கியத்துவம் பற்றி **விபரிக்குக.**

**(3 புள்ளிகள்)**

1.19. முகாமைத்துவத்த தகவல் முறைமை என்பது தகவல்களை சேகரித்து, செயன்முறைப்படுத்தி, அனைத்து மட்ட முகாமையாளர்களுக்கும் வழங்குவதாகும். அவர்கள் அதனை தீர்மானமெடுத்தல், திட்டமிடுதல், நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாகட்கல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றிற்குப் பயன்படுத்துவார்கள்.

**வேண்டப்படுவது:**

நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்ற ஆறு வகையான முகாமைாத்துவ தகவல் முறைமையினை **நிரற்படுத்துக.**

**(3 புள்ளிகள்)**

1.20. வாடிக்கையாளர் திருப்தியினை அதிகரிப்பதற்காக நவீன வணிகங்கள் தமது பெறுமதி வழங்கல்களில் பல்வேறு விடயங்களை உள்ளடக்குகின்றன.

**வேண்டப்படுவது:**

அத்தகைய பெறுமதி வழங்கல்கள் ஆறு (06) இனை **நிரற்படுத்துக.**

**(3 புள்ளிகள்)**

# பகுதி 2

*நான்கு வினாக்களில் மூன்று வினாக்கள் பதிலளிக்க வேண்டும்.*

*பகுதி 2 இற்கான மொத்தப் புள்ளிகள் 30 ஆகும்.*

*இப்பகுதிக்கு சிபார்சு செய்யப்பட்ட நேரம் 54 நிமிடங்கள்*

**வினா 02**

AB (தனியார்) லிமிட்டட் ஆனது 30 வருட காலத்திற்கும் மேலான அனுபவத்தினை அழகுபடுத்தல் தொடர்பிலான சந்தையில் கொண்டுள்ளது. நடைமுறையில் கம்பனியானது ஷம்பு வகைகள் மற்றும் அழகுசாதன கிறீம் வகைகளையும் பெண்களுக்கான பல்வேறு வகையிலான பேஸ் வோஸ் களையும் உற்பத்தி செய்கின்றது. இறுதியாக இடம்பெற்ற முகாமைக்கூட்டத்தில் ABஇனது வணிகத்தினை ஆண்களின் அழகுசாதனங்கள் தொடர்பிலான சந்தைக்கும் விரிவாக்குவது என்பதனையும் கவனத்தில் எடுத்தல் தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. உலகளாவிய ரீதியில் ஆண்களின் அழகுசாதனம் தொடர்பிலான சந்தையும் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது. எவ்வாறெனினும், இந்தச் சந்தையினுள் நுளைவதற்காக முன்னெடுக்கப்பட்ட முன்னெடுப்புக்களுக்கா AB நிறுவனமானது அதிநவீன உற்பத்தி வசதிகள் இலங்கையில் குறைவாகவுள்ளதனால், C எனும் நாட்டிலிருந்து ஆண்களுக்கான அழகுசாதனப் பொருட்களை இறக்குமதி செய்ய எண்ணுகின்றது.

**வேண்டப்படுவது:**

1. இப்புதிய வணிகத்தினது பொதுவான சூழலின் பிரதானமான பரிணாமங்களை நிரற்படுத்துக. அத்துடன் அவற்றில் இரண்டினது (02) தாக்கத்தினை விளக்குக. **(5 புள்ளிகள்)**
2. AB (தனியார்) லிமிட்டட் ஆனது C எனும் நாட்டிலிருந்து ஆண்களுக்கான அழகுசாதனப் பொருட்களை இறக்குமதி செய்கின்ற போது நடைமுறையில் காணப்படுகின்ற நாணயமாற்று விகிதமும், பணவீக்கமட்டமும் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதனை விபரிக்குக.

**(5 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 03**

கம்பனியின் முகாமையாளர் ‘‘சிறப்பான ஊழியச் சந்தையானது திறந்ததாக, நெகிழத்தக்கதாக, ஒப்பீட்டுரீதியில் தாராளமானதாகக் காணப்படுகின்ற போது மனித வள முகாமையானது, கம்பனிக்கு மிகச்சிறிய பெறுமதியானதாகக் காணப்படுகின்றது. ஏனெனில், ஊழியர்களின் தேவை எழுகின்ற போது வேலைக்கமர்த்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்’’ என நம்புகின்றார்.

**வேண்டப்படுவது:**

1. மனித வள முகாமைத்துவத்தினை (HRM) வரைவிலக்கணப்படுத்துவதோடு HRM இல் காணப்படும் படிமுறைகளைக் கூறுக.

**(5 புள்ளிகள்)**

2. அனைத்து முகாமையாளர்களுக்கும் ஏன் HRM முக்கியமானது என அடையாளங்காண்க.

**(5 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 04**

வேச்சுவல் (வரையறுத்தது) லிமிட்டட்டானது அதியுயர் திறன்வாய்ந்த ஊழியர்களைக் கொண்டு விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனியாகும். அண்மையில், குறிப்பிட்ட நேரத்திற்கு உற்பத்திப் பொருட்களை வழங்கத்தவறியதால், அது தனது பிரதான வாடிக்கையாளரை இழந்தது. தொடர்ந்துமாக நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையானது நடைமுறையிலுள்ள நிறுவனக்கட்டமைப்பில், பல்வகையான மட்டங்களைக் கொண்டு காணப்படுவதனால், மெதுவாகச் செயற்படுவது அவதானிக்கப்பட்டது. வேச்சுவல் (வரையறுத்தது) லிமிட்டட்டில், குறுக்குச் செயற்பாட்டுமுறைமைகளும், குறுக்கு ஒழுக்கக்குழு வேலைகளும் ஆதரவாகயில்லாது காணப்படுகின்றது. அத்துடன், குறுக்குச் செயற்பாட்டுமுறைமைகள் செயற்படுத்தப்படுகின்றபோது வேலையினை அடையாளங்காணுதலானது பாதிவழியில் இழக்கப்படுகின்றது. உதாரணமாக, முதலாவது செயற்பாட்டு முகாமையாளர் ஒரு நடவடிக்கையினை முடிக்கும் போது அதன் முடிவுகள் அடுத்த செயற்பாட்டு முகாமையாளருக்கு வழங்கப்படும். அவ்வாறு அந்தச் செயன்முறையானது தொடர்ந்தேர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே இங்கு இறுதி முடிவுப்பொருளுக்கான உரிமையினையும், பொறுப்பினையும் தம்மகத்தே வைத்துக்கொள்ள எவருமில்லை. அதேவேளை, போட்டித்தன்மை வாய்ந்த, சக்தி வாய்ந்த சந்தையானது, தொழிற்பாடுகளுக்கிடையில் மனித வளங்களைப் பகிர்வதில் அதிக நெகிழ்ச்சித் தன்மைகொண்டதாகவும், சந்தைக்கு தரம்வாய்ந்த பொருட்களை விரைவாக வழங்குவதற்கும் பலவந்தப்படுத்துகின்றது.

**வேண்டப்படுவது:**

1. வேச்சுவல் (வரையறுத்தது) லிமிட்டட்டினது நடைமுறையிலுள்ள நிறுவனக் கட்டமைப்பின், பிரதான விடயங்களை **அடையாளங்கண்டு விளக்குக.**

**(6 புள்ளிகள்)**

2. மேலே (1)இல் அடையாளங்கண்ட விடயத்திற்கு தீர்வினை (நியாயங்களுடனான) **விபரிக்க.**

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 05**

FP (தனியார்) லிமிட்டட்டானது, இலங்கையில் முன்னிலையிலுள்ள சில்லறை வர்த்தகக் கிளைகளுக்கு டெனிம் காற்சட்டைகளை உற்பத்தி செய்து வினியோகிக்கின்றது. கம்பனியானது, பாரிய தொகுதிகளாகவே அதாவது தொகுதியில் 1000 அலகுகள் இருக்கும் வண்ணம் உற்பத்தி செய்கின்றது. எவ்வாறெனினும், கடந்த சில ஆண்டுகளாக சில்லறை விற்பனையாளர்கள் ஒவ்வொரு கட்டளைக்கும் பல பாணிகளைக் கேட்பதும், ஒவ்வொரு பாணியிலும் சிறிய எண்ணிக்கையிலான கேள்வித் தொகையினையே கேட்கும் தன்மை அதிகரிப்பதனைக் காணக்கூடியதாக இருப்பது கண்டறியப்பட்டது. FP யினது சந்தைப்படுத்தல் முகாமையாளர் நிறுவன இயக்குனருக்கு (MD) தான் சில்லறை விற்பனையாளர்களை ஒரே மாதிரியான பாணியில் குறைந்தது 1000 அலகுகளை குறைந்த கட்டளைத் தொகையாக எடுக்கும்படி பணிக்க முடியாது எனவும் ஆகவே கம்பனியானது நடைமுறையிலுள்ள தொகுதியின் அளவினை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் தொடர்ச்சியாகத் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அவா' மேலும் MD க்கு, மிக அண்மைக்காலத்தில் தான் பங்குபற்றிய கருத்தரங்கில் அவர் உற்பத்தியானது வாடிக்கையாளரது கேள்விக்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுவதான 'மெல்லிய உற்பத்தி' (Lean Manufacturing) எனும் உற்பத்தி முறைமையினைப் பற்றி அறிந்ததாகவும் தெரிவித்தார். அத்துடன், நடைமுறையிலுள்ள 'தொகுதி' உற்பத்தி முறைமையினை விடுத்து அத்தகைய உற்பத்தி முறைமையினைப் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**வேண்டப்படுவது:**

1. தொகுதி உற்பத்திக்கும், வேலைஉற்பத்திக்கும் இடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.**

**(2 புள்ளிகள்)**

2. FP யினது சந்தைப்படுத்தல் முகாமையாளருடன் நீர் உடன்படுகின்றீரா என **விபரிக்குக.** அத்துடன், நடைமுறையில் தொகுதி உற்பத்தியினால் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை மேவுவதற்கு 'மெல்லிய உற்பத்தி' (Lean Manufacturing) எவ்வாறு உதவி செய்யும் என **ஆலோசனை வழங்குக.**

**(8 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

# பகுதி 3

*கட்டாய வினாக்கள்.*

*பகுதி 3 இற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.*

*இப்பகுதிக்கு சிபார்சு செய்யப்பட்ட நேரம் 36 நிமிடங்கள்*

**வினா 06**

இலங்கையிலுள்ள உற்பத்தித் துறைகளில் ஒன்று XYZ கைத்தொழில் துறையாகும். இது அதிகளவில் ஒன்றுடனொன்று சார்ந்திருக்கக்கூடிய பலதரப்பட்ட நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இக்கைத்தொழில்துறைக்கு பலத்த உள்வருகை மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. கடந்த சில தசாப்தங்களாக இரண்டு புதிய நிறுவனங்கள் மாத்திரமே இக்கைத்தொழில் துறைக்குள் வருகை தந்துள்ளன. தற்போது மூன்று நிறுவனங்கள், நிறுவனம் A, நிறுவனம் B, நிறுவனம் C என்பவை முறையே உற்பத்திப் பொருள் A, உற்பத்திப் பொருள் B, உற்பத்திப் பொருள் C என்பவற்றினை உற்பத்தி செய்வதுடன், இக்கைத்தொழில்துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இம்மூன்று பொருட்களினதும் கேள்வி, நிரம்பல் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

| **உற்பத்திப் பொருள்** | **கேள்வி** | **நிரம்பல்** |
|---|---|---|
| **A** | Qd = 220 – 0.40P | Qs = 4P |
| **B** | Qd = 171 - 0.42P | Qs = 3P |
| **C** | Qd = 157 – 1.14P | Qs = 2P |

இம்மூன்று A, B, மற்றும் C ஆகிய நிறுவனங்களும் அவைகளின் மூன்று உற்பத்திப் பொருட்களினதும் ஓரலகிற்கான விலைகளை முறையே ரூபா 50, ரூபா 60, ரூபா 70 என அதிகரிக்க எதிர்பார்க்கின்றன. தற்போது மூன்று பொருட்களுக்குமான சந்தைச் சமனிலை விலை ரூபா 50 ஆகும். இக்கைத்தொழிலின் சந்தை இழிவு விலையும் இதுவேயாகும். உற்பத்திப் பொருள் A ஆனது அடிப்படை பொதியிடலுடன் சந்தைப்படுத்தப்படுகின்றது. அதனது விளம்பஅச்சு ஊடகத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதேவேளையில், உற்பத்திப் பொருள் B மற்றும் C போன்றவை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. உற்பத்திப் பொருள் A இனை வழங்கும் நிறுவனமானது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சந்தை ஆய்வில் முக்கியமானவிடயம் எனக் குறிப்பிட்டதனைப் போன்று சந்தை எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் முற்றுமுழுதான புதிய பொதியிடல் ஒன்றினை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கின்றது. அதேவேளையில், புதிய நிறுவனம் ஒன்று புதிய பொருளுடன் அதாவது "உற்பத்திப் பொருள் D" உடன் 2015 நடுப்பகுதியில் துறைக்குள் புக திட்டமிடுகின்றது. மேலும், புதிய நிறுவனமானது (நிறுவனம் D யினது உற்பத்திப் பொருள் D) தற்போது போட்டியாளர் தொடர்பிலான தகவல்களைப் பெறும் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டுள்ளது. அதற்கு முகங்கொடுக்கும் வண்ணம், இக்கைத்தொழில்துறையில் தற்போதுள்ள நிறுவனங்கள் புதிய வருகைக்கு மிகத் தீவிரமாக எதிர்விளைவினை வழங்க ஆயத்தமாகின்றன.

இந்த உற்பத்திப்பொருட்களுக்கான மூலப்பொருட்கள் இந்தியா மற்றும் தென் அமெரிக்காவின் சில நாடுகளில் கிடைப்பனவாகக் காணப்படுகின்றன. எவ்வாறெனினும், நிறுவனங்களில் அனேகமானவை மூலப்பொருட்களை ஒரு குறிப்பிட்ட இந்திய வழங்குனரிடமிருந்து இறக்குமதி செய்கின்றன. ஏனெனில், தென் அமெரிக்க நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்ற போது அதிகமான போக்குவரத்துக் கிரயம் ஏற்படுகின்றது என்பதனாலாகும். மேலும், உள்ளூர் சந்தையில் இப்பொருளுக்கான மிகப்பொருத்தமான மாற்றீடுகள் காணப்படாமையுமாகும்.

**வேண்டப்படுவது:**

1. பொருத்தமான நியாயங்களை முன்வைத்து XYZஎனும் கைத்தொழில்துறையின் சந்தைக் கட்டமைப்பினை **விபரிக்குக.**

**(3 புள்ளிகள்)**

2. உற்பத்திப் பொருள் A இனை வழங்கும் நிறுவனத்தின் போட்டி நிலைமைகளை மைக்கல் E. போட்டரினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து சக்தி மாதிரியின (Five Forces model) அடிப்படையில் **விபரிக்குக.**

**(7 புள்ளிகள்)**

3. போட்டித்தன்மையான நிறுவனங்களின் சாத்தியமான சந்தை எதிர்விளைவுகளின் அடிப்படையில் மூன்று நிறுவனங்களுக்கும் வெவ்வேறாக மொத்த வருமானத்திலும், இலாபத்திலும் உற்பத்திப் பொருள் A, B மற்றும் C, க்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள விலை அதிகரிப்பினால் ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கத்தினை **விபரிக்குக.**

**(10 Gள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**